# New Gen தமிழன்

இதழ் 2 பிப்ரவரி 2013

Published by Prime Point Foundation



பாரதி கண்ட புதுமை பெண்
பவிகா பாரதி

## இந்த இதழில்


2 தலையங்கம்

3 பவிக்கா பாரதி

5 தமிழ் புத்தகங்கள்

7 The Diving Bell and the Butterfly

9 கலாமின் அனுபவங்கள்

10 சமூகப்பணி


## இமெயிலில் தொடர்பு கொள்ள

newgenthamizhan@gmail.com

# தலையங்கம்

## கருத்து சுதந்திரம்

கருத்து சுதந்திரம் குறித்து பல்வேறு தளங்களில் பல்வேறு வகையான விவாதங்கள் வெட்டியும், ஒட்டியும் நாடு முழுவதும் நடந்து கொண்டிருக்கின்றன. அடிப்படையில் கருத்து சுதந்திரம் எனபது என்ன? அதற்கு வரைமுறைகள் இருக்கிறதா? அதற்கான நெறிமுறைகள் அவசியமா?

நமது இந்தியா ஒரு பன்முகத் தன்மை வாய்ந்த நாடு. மதம், மொழி, இனம், நிறம் என பல வேறுபாடுகள், கலாச்சாரங்கள். மொழியை வைத்து எப்போது மாநிலங்கள் பிரிக்கப்பட்டதோ அப்போதே இந்தியர்கள் என்ற பார்வையை விடுத்து, மக்கள் மாநிலங்கள் அளவில் அது சார்ந்த மொழி அளவில் சுருங்கிவிட்டனர்.

அந்தந்த மாநிலங்களின் மண் சார்ந்த பிரச்சினைகள், மொழி, கலாசாரம், பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு உருவெடுக்கும் பிரச்சினைகள் என்று ஒவ்வொரு கருத்திற்கும், அது சார்ந்த பிரச்சினைக்கும் தனித் தனி அடையாளங்கள் உண்டு. இதனால் ஒட்டு மொத்த இந்தியாவிற்குமான ஒரே கருத்தாக்கம் என்பது ஏற்படமுடியாமலும், ஏற்புடையதாக இல்லாமலும் இருக்கிறது.

இந்த நிலையில், ஒரு மாநிலத்தவருக்கு ஏற்புடையதாக இருக்கும் ஒரு விஷயம் இன்னொரு மாநிலத்தவருக்கு ஏற்புடையதாக இருப்பதில்லை. ஒட்டு மொத்த சமுதாயத்திற்கான, நாட்டிற்கான சட்டங்கள் பொதுவானதாக இருந்தாலும், மதம் என்று வரும்போது, திருமணங்கள், விவாகரத்துகள், சொத்துரிமை , சடங்குகள், சம்பிரதாயங்கள் என்பவை மதங்களை அடிப்படையாக வைத்ததாகவே இருக்கின்றன.

இது போன்ற ஏகப்பட்ட நடைமுறை சிக்கல்கள் இருக்கும் நாட்டில் கருத்தொற்றுமை என்பது சற்று சிரமம். அதிலும், மதம் சார்ந்த விஷயங்களிலோ, ஒழுக்கம் சார்ந்த விஷயங்களிலோ மாநிலத்திற்கு மாநிலம் வேறு வேறு நிலைப்பாடுகள். இதனாலேயே ஒரு மாநிலத்தில் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப் படும் ஒரு விஷயம் இன்னொரு மாநிலத்தில் மிகப் பெரிய சமூக போராட்டத்திற்கோ, எதிர்ப்புக்கோ காரணமாகிறது.

ஆக கருத்து சுதந்திரம் என்பது அவரவர் பிரச்சினை என்று வரும்போது மட்டும் ஒரு வரம்புக்குள்ளாக வைத்துப் பார்க்கப்படுவதும் தங்களை பாதிக்காத பிற விஷயங்களில் எல்லையற்ற கருத்து சுதந்திரத்திற்காக வாதிடுவதும் நம் நாட்டில் வாடிக்கையாக நடக்கும் வேடிக்கை. சமூகப் பிரச்சினைகளில் தான் கருத்து சுதந்திரம் இப்படி என்றால், நடைமுறை வாழ்க்கையில், சாதாரண விஷயங்களில் கருத்து சுதந்திரம் பின்பற்றப்படுகிறதா என்றால் இல்லை என்பது தான் விடையாக இருக்கிறது.

இந்தியாவில் பெரும்பான்மையான திருமணங்கள் ஏற்பாட்டுத் திருமணங்கள் தான். இவற்றுக்கும் ஒரு தெளிவான வியாபார ஒப்பந்தத்திற்கும் வித்தியாசம் என்பதே இல்லை எனலாம். திருமணத்திற்கு முக்கியமான காதல், விருப்பம் போன்ற கருத்து சுதந்திரங்களுக்கு அங்கு இடம் இல்லை. இதை பெரும்பான்மையான மக்களும் கேள்வி இன்றி ஏற்றுக் கொள்ளப் பழக்கப் பட்டிருக்கிறார்கள். இதில் எங்கிருக்கிறது கருத்து சுதந்திரம் ?

இத்தகைய திருமணங்கள் ஒரு உதாரணம் தான். இது போல பல அன்றாட வாழ்க்கை நடைமுறைகளில், கருத்து சுதந்திரம் என்ற எண்ணமே இல்லாமல் , அதன் தேவை பற்றிய நினைப்பு கூட இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தான் கருத்து சுதந்திரம் பற்றிய கூச்சலும் போடத் தயங்குவதில்லை.
முதலில் இத்தகைய நிஜங்களை மாற்றுவோம். சொந்தமாக யோசித்து தீர்மானமான முடிவுகளை எடுக்கும் திறமையை மக்கள் அனைவரும் பெறவேண்டும். இது நடந்து விட்டாலே , நிழலில் கருத்து சுதந்திரம் தன்னாலே காப்பாற்றப் பட்டு விடும். **- By Banu Gomes**

## சாதனைப் பெண் ...தமிழ்ப் பெண் ...இளம் விமானி பவிக்கா பாரதி.

இந்த இளம் பெண் நிகழ்த்தி இருக்கும் சாதனை சாதாரணமானது அல்ல. இந்தியாவில் மிக இளம் வயதில் விமானி ஆனவர் என்ற சாதனைக்கு சொந்தக்காரர்.



இவருடைய பெற்றோர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். பவிக்கா பிறந்து வளர்ந்தது மும்பையில். இவருடைய தந்தை வழி தாத்தாவிற்கு பாரதி என்றால் மிகவும் பிடிக்குமாம். அதனால் தன்னுடைய குழந்தைகள் அனைவருக்கும் பாரதி என்று பெயரில் சேர்த்தே வைத்திருக்கிறார். அதே வழக்கத்தில் இவருடைய தந்தையும், பவிக்கா விற்கு, பவிக்கா பாரதி' என்று பெயர் வைத்திருக்கிறார்.

அவருடனான ஒரு கலந்துரையாடல் ..

**உங்களுக்கு சிறு வயதிலிருந்தே விமானி ஆக வேண்டும் என்பதுதான் கனவு, லட்சியம் எல்லாமாகவும் இருந்ததா ?**

+2 முடிக்கும் வரை எனக்கு டாக்டர் ஆக வேண்டும் என்பதுதான் கனவாக இருந்தது, அதற்கான நுழைவுத் தேர்வுக்கு தயார் பண்ணிக் கொண்டிருந்தேன். தற்செயலாக ஒரு நாள், குடும்ப நண்பரான ப்ரீமா ரமேஷ் என்பவரைச் சந்தித்தேன். இதை, கடவுளுடைய விருப்பம் என்று தான் சொல்லவேண்டும், அவருடைய கணவர் விமானியாக இருந்தார். Aviation , Medicine இரண்டு துறைகளைப் பற்றியும் அதன் +, - எடுத்துக் கூறி, நான் ஏன் விமானி ஆகக் கூடாது என்றும் என்னை உற்சாகப் படுத்தினார். அடுத்து வந்த 15 நாட்களில் நான் டாக்டர் ஆக வேண்டும் என்ற எண்ணத்தை விடுத்து, விமானி ஆக வேண்டும் என்ற திடமான முடிவை எடுத்து விட்டேன்.

**விமான ஓட்டி லைசென்ஸ் வாங்குவதற்கான பயிற்சி , அதிலிருந்த சிரமங்கள், அதை நீங்கள் சமாளித்த விதம் பற்றி கூறுங்கள்..**

நான் மும்பையில் கொஞ்சம் செல்லமாக வளர்க்கப் பட்ட பெண். பயிற்சி தொலைவில் ஒரு சிறு கிராமத்தில் , அதிலிருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் இருந்த விமான தளத்தில் நடந்தது. செய்தித் தாள் கூட கிடைக்காத ஊர் அது. வெயில், மழை பாராமல் பயிற்சி நடக்கும். காலையிலிருந்து மாலை வரை 'tarmac ' லேயே flying கிடைக்காதா என்று உட்கார்ந்திருப்போம். மற்ற பயிற்சிகளைப் போல oraganised ஆக இந்த பயிற்சிமுறை இருக்காது. இது போல பல சிரமங்கள் இருந்தாலும், விமானி ஆவது என்ற இலட்சியத்தை நினைத்துக் கொண்டு, அத்தகைய சிரமங்களை கடந்து விட்டேன். என் அம்மாவும் என்னுடன் இருந்தது மேலும் உதவியாக இருந்தது.

**அம்மா உங்களுடன் இருந்ததாக சொல்கிறீர்கள். அப்படியானால் உங்கள் அம்மாவும் விமான பயிற்சி எடுத்துக்கொண்டார்களா ?**

ஆமாம். முதலில் நான் கனடா நாட்டின் Flying Club- ல் பயிற்சி எடுப்பதாக இருந்தது. அப்போது எனக்கு 16 வயதுதான் என்பதால் தனியாக என்னை அனுப்புவதற்கு பதிலாக அம்மாவும் துணைக்கு வருவதாக இருந்தது. அப்போது சும்மா கூட வருவதை விட பயிற்சியும் எடுக்கலாமே என்ற எண்ணம் அப்படிதான் வந்தது. பின்னர், அம்மாவும், நானும் சேர்ந்தே பயிற்சி எடுத்து ஒன்றாகவே லைசென்ஸ் வாங்கினோம்.

**Limca Book Of Records- ல் உங்கள் பெயர் இடம் பெற்றிருக்கிறது. அது குறித்து...**

4 சாதனைகளுக்காக Limca Book Of Records-ல் என் பெயர் இடம் பெற்றுள்ளது.

1. அம்மாவும், பெண்ணும் சேர்ந்து பயிற்சி எடுத்து லைசென்ஸ் வாங்கியது. 2. 2007-ல் , இந்தியாவிலேயே இளம் வயதில், அதாவது 18 வயதில், Commercial Pilot லைசென்ஸ் வாங்கியது. 3. 2011-ல் , அதாவது 21 வயதில், Airline Transport Pilot License வாங்கினது. 4. அதன் பிறகு 7 மாதங்களில் Captain ஆனேன்.அந்த வகையில், மிக இளம்வயது Captain என்ற சாதனை.

**Commercial Pilot என்ற முறையில் நீங்கள் பறந்திருக்கும் hours எவ்வளவு? உங்கள் விமானத்தில் நிறைய முக்கியமானவர்கள் வந்திருப்பார்கள். அது பற்றி...**

நான் இது வரை 3600 மணிகள் பறந்திருக்கிறேன். இதில் 1000 hours க்கு மேல் நான் commander அதாவது first pilot ஆக இருந்து ஓட்டி இருக்கிறேன். ஒரு முறை சென்னை - சேலம் விமானத்தில், டாக்டர். அப்துல் கலாம் வந்திருந்தார். நான் in -flight ல் அவரை சென்று பார்த்து பேசினேன். அது மறக்க முடியாத அனுபவம்.

**பவிக்கா , நீங்கள் first pilot ஆக commander ஆக இருந்து விமானத்தை செலுத்திக் கொண்டிருக்கும்போது, ஏதாவது emergency ஏற்பட்டிருக்கிறதா ?**

Energency என்று ஏற்பட்டதில்லை. ஆனால் ஒரு முறை ஹைதராபாத்-ல் பயணிகள் அனைவரும் ஏறி அமர்ந்தபின், விமானத்தை கிளப்புகிற சமயத்தில், low visibility பிரச்சினை ஏற்பட்டது. விமானத்தை கிளப்புவதற்கு அந்த நேரத்தில் minimum visibility தேவை 900 mts ஆனால் இருந்ததோ 500 mts தான். சில மணிநேரங்கள் தாமதத்திற்கு பிறகே விமானத்தை கிளப்பினோம். அதே போல ஹுப்ளி -ல் தரை இறங்குவதற்கும் visibility பிரச்சினை ஏற்பட்டது. இரண்டு முறை approach பண்ணியும் runway கண்டுபிடிக்க முடியாமல், வானத்திலே வட்டமடித்து , visibility கிடைத்தவுடன் தரை இறக்கினேன். அது ஒரு வித்தியாசமான அனுபவமாக இருந்தது.

**நீங்கள் டிகிரி படித்திருக்கிறீர்களா?**

ஆமாம். மும்பை பல்கலைகழகத்தில் Bsc Aviation படித்தேன். இப்போது, அமெரிக்காவில் உள்ள **Embry Riddle Aeronautical University** ல் MBA Aviation Management படித்துக் கொண்டிருக்கிறேன்.

**உங்கள் ஓய்வு நேரத்தில் நீங்கள் செய்வது என்ன பவிக்கா ?**

எனக்கு சிறு வயதிலிருந்தே drawing , painting , music இவற்றில் மிகுந்த ஆர்வம் உண்டு. பல பரிசுகளும் வாங்கி இருக்கிறேன். London Trinity Music College -ல் Keyboard , Piano போன்றவற்றில் 5th Grade வரை முடித்திருக்கிறேன்.

**இதைக் கூட உங்களின் சாதனைப் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்றே தோன்றுகிறது. நீங்கள் ஹாபி ஆக செய்வதைக் கூட , முழு ஆர்வத்தோடு அதில் ஈடுபட்டு, அதை சிறப்பாக செய்கிறீர்கள். உங்களைப் போன்ற இளைஞர்களுக்கு, நீங்கள் சொல்ல விரும்புவது என்ன ?**

நினைத்ததை அடைவதற்கு தேவை விடாமுயற்சியும், உழைப்பும்தான். அதோடு, நம்மால் முடியுமா என்றெல்லாம் யோசிக்காமல் கிடைக்கிற வாய்ப்புகளை தயங்காமல் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

பவிக்கா , உங்களுடைய விடாமுயற்சி, செய்யும் செயலில் நீங்கள் காட்டும் ஆர்வம், ஈடுபாடு, செயல்திறன் போன்றவற்றை வைத்துப் பார்க்கும்போது, 'நேர் கொண்ட பார்வையும், தைரியமுமான புதுமைப் பெண்' என்ற பாரதியாரின் கனவுப் பெண்ணுக்கு நீங்கள் உருவம் கொடுத்திருக்கிறீர்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

Interview by Banu Gomes

## தமிழ் புத்தகங்கள், வாசகர்கள், தொழில்நுட்பம்



ஆங்கிலத்தில் உள்ளது போல தமிழில் புத்தகங்கள் வாசிக்க சுலபமாக இல்லை, அல்லது பல தளங்களில் இக்கதைகள் இயங்குவதில்லை போன்ற விமர்சனங்கள் அவ்வப்போது எழுவதுண்டு.
பொதுவாக ஆங்கிலத்தில் வெளியாகி விற்பனையில் சாதனை படைக்கும் புத்தகங்கள், காதலோ அல்லது அறிவியல் கதைகளாகவோ இருக்கின்றன. சமகால தமிழ் புத்தகங்கள் இந்த இரண்டு தளங்களையுமே தாண்டி சென்று விட்டன.

தமிழில் அறிவியல் கதைகள் என வரும்பொழுது சுஜாதா எழுதிய ”விஞ்ஞான சிறுகதைகளே” குறிப்பிடும்படி இருக்கின்றன. பல்வேறு கால கட்டங்களில் வெளியான கதைகளின் தொகுப்பு அது. சாதாரண மக்களுக்கு புரிவது போன்ற எழுத்து நடையில் இயற்பியலும் வேதியியலும் நகைச்சுவையும் கையாளப்படிருக்கும்.

சென்ற வருடம் வெளியான ஜெயமோகனின் 'விசும்பு' சிறுகதைத் தொகுப்பும் அறிவியல் சார்ந்ததே. ஆனால் வேறு கண்ணோட்டத்தோடு அறிவியலைப் பார்த்த ஒரு தொகுப்பு. உதாரணமாக பொதுவில் அறிவியலில் கையாளப்படாத உளவியல், விலங்கியல், மருத்துவயியல் போன்றவற்றை அநாயாசமாக ரசிக்கும்படி எடுத்துரைத்தது.

நாவல்களில் சுஜாதா எழுதிய “ஆ”, “பேசும் பொம்மைகள்” போன்றவை ஜெனடிக்ஸ் மற்றும் ரோபோடிக்ஸை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவை. ஆனால் பெரும்பான்மையான தமிழ் வாசகர்களே இதை படித்திருப்பார்களா என்பது சந்தேகம் தான். இந்த ஆண்டு புத்தகச் சந்தையில் வெளி வந்திருக்கும் ”6174” என்ற நாவல் முற்றிலும் ஒரு அறிவியல் கதையே. டான் பிரவுனின் ரசிகர்கள் கண்டிப்பாக இதையும் ரசிப்பார்கள்.

தமிழில் அறிவியல் கதை எழுதும் பலர் உள்ளாகும் சிக்கல் அவர்களுடைய வாசகர்கள் யார் என அவர்களுக்கே தெரியவில்லை. சாமானியனுக்கு புரிய வேண்டும் என்பதாலேயே பல விஷயங்களில் உள்சென்று விளக்காமல் மேலோட்டமாக எழுதியுள்ளதைக் காண முடியும். அது ஒன்றைத் தவிர மொழியிலும், சொற்களிலும் இந்த நாவல்கள் எந்த வாசகனையும் திருப்திப்படுத்தும்.
இவ்வாறான புத்தகங்களை மக்களைச் சென்றடைய சரியான சந்தைப்படுத்துதல் இல்லை என்பது மிகப் பெரிய குறை. ஆவலை உண்டாக்கும் (hype creation) உத்திகளை பதிப்பகங்கள் கையாள்வதே இல்லை. அதனாலேயே பல பேருக்கு சில அரிய புத்தகங்களைப் பற்றிய தகவல்கள் சென்றடைவதே இல்லை.

தமிழ் புத்தகங்களை பொறுத்த வரையில், பதிப்பிக்கப் பட்ட புத்தகங்களுக்கு தான் இன்னும் வாசகர்களிடையே வரவேற்பு உள்ளது. இதனாலேயே, திறமை உள்ள பல புதுமுக எழுத்தாளர்கள் , பதிப்பகதார்களின் பிடியில் சிக்கி உள்ளனர். புத்தகங்களை சந்தைப் படுத்துவதில் பதிப்பகங்கள் அனுபவம் வாய்ந்தவை என்பதால், இந்த ஒரு காரணத்தை வைத்தே எழுத்தாளர்களின் படைப்புகளை உரிய விலை கொடுக்காமல், விற்பனையில் பங்கும் கொடுக்காமல், பதிப்பகங்களுக்கே அவை சேரும் வகையில் எழுத்தாளர்களை ஏமாற்றும் நிலையும் இருக்கிறது.

தமிழ் பதிப்பகங்களில், தொழில் நுட்பத்தை பயன்படுத்தி புத்தக வாசகத்தை பல தளங்களிலும் அடைய வழி செய்ய ஆரம்பித்திருப்பது கிழக்கு பதிப்பகம் மட்டுமே.

கிழக்கு பதிப்பகம் இப்பொழுது ஐபேட் மற்றும் ஐபோனில் இயங்கும் ஒரு அப்ளிகேஷன் துவங்கி உள்ளது. இப்பொழுது சந்தையில் உள்ள கோபோ, அல்டிகோ போன்று சில புத்தகங்களை தரவிறக்கவும், பல புத்தகங்களை வாங்கவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆண்டிராய்டு பிளாட்பாரமில் பல கல்கி, தேவன், கதைகள் அப்ளிகேஷன் வடிவில் கிடைக்கின்றன. தொடர்ந்த ஆதரவு இருந்தால் பல எழுத்தாளர்கள் கதைகளும் வரலாம். அமேசான் செய்ததைப் போல பல புதிய எழுத்தாளர்கள் தாங்களே புத்தகங்களை பதிப்பிக்கவும் செய்யலாம்.

தரவிறக்க புத்தகங்கள் சில.
பொன்னியின் செல்வன்
https://play.google.com/store/apps/details?id=com.whiture.apps.tamil.kalki.ponniyin&feature=search_result
ஜெயகாந்தன் சிறுகதைகள்.
https://play.google.com/store/apps/details?id=com.book.tamilstory&feature=search_result
மேலும் சில தமிழ்ப் புத்தகங்கள்.
https://play.google.com/store/apps/developer?id=Sudhakar+Kanakaraj

எழுதியவர் - பிரகதீஷ் பிரசன்னா

---




பாரதி கண்ட புதுமைப் பெண் இளம் விமானி பவிக்கா பாரதியின் பேட்டியை கீழ்கண்ட தளத்தில் கேட்கலாம்.

http://youtu.be/Dv000MCtOJw

# The Diving Bell and the Butterfly

இது ஒரு புத்தகத்தின் பெயர். புத்தகத்தின் பெரிய வெற்றியைத் தொடர்ந்து அது திரைப்படமாகவும் எடுக்கப்பட்டது.




இது சாதாரணமாக நடப்பது தானே என்கிறீர்களா?

இதை ஒரு சாதாரணமானத் திரைப்படத்தின் முன்னோட்டமாகவோ, அல்லது ஒரு சராசரியான புத்தகத்தின் அறிமுகமாகவோ பார்க்கலாம். அல்லது முற்றிலும் மாறாய் , ஒரு சாதாரண மனிதனின் அசாதாரண நம்பிக்கை, அதன் விளைவு பற்றிய பதிவாகவும் பார்க்கலாம். ஒரு கதை கேட்கப் போகிறோம். நல்லக் கதை. 'உம்' கொட்டுங்கள்.

இந்த புத்தகம் எழுதப்பட்டது என்பதே ஒரு மிகப் பெரிய சாதனை.

அப்படி என்ன சாதனை ? பார்க்கலாம்.

உலகின் மிகப் புகழ்பெற்ற Elle ஃபேஷன் பத்திரிக்கையின் ஆசிரியர் ஜேன் பாபி. ஃப்ரென்ச்சு நாட்டவர். நடுத்தர வயதில், எல்லாம் அமையப் பெற்ற வாழ்வு என நீங்கள் எதை எதைப் பட்டியலிட முடியுமோ, அவை எல்லாமுமே அவரிடம் அளவுக்கு அதிகமாகவே இருந்தது. அவருடைய நாற்பத்தைந்தாவது வயதில், லாக்டு-இன் சின்ட்றோம் (Locked In Syndrome - பக்கவாதம் போன்ற நோய்) எனும் மிக அரிய நோய்க்கு ஆளானார். அந்த நோயின்படி, கை, கால் உள்ளிட்ட உறுப்புகள் முற்றிலும் செயலற்றுப் போகும், ஆனால் மனம் (மூளை) மாத்திரம் வழக்கம்போல் நன்றாகச் செயல்படும். இன்னும் வெளிப்படையாய்ச் சொல்லப் போனால் - மருத்துவமனையில் காய்கறி வாழ்க்கை. ஒரு கண்ணில் தொற்று ஏற்பட்டு அதையும் மூடி தைத்துவிட நேர்ந்தது. அவரால், ஒருக் கண்ணால் மட்டும் பார்க்கவும், அந்த கண்ணிமையைச் சிமிட்டவும் மட்டும் முடியும். வேறெந்த இயக்கமும் கிடையாது.

தன் நிலைமைக்கு அழ வேண்டிய மட்டும் அழுது தீர்த்த பின், அவருக்கு ஒரு ஆசை வந்தது. புத்தகம் எழுத வேண்டும் என்று. கண்ணிமைகளைத் தவிர வேறொன்றையும் அசைவுறச் செய்ய முடியாத நிலையில், அவரின் ஆசை பேராசையாகத்தான் இப்போதும் படுகிறது.

மனம் தளராத பாபி, அவரின் உதவியாளருடன் ஒரு முயற்சியில் இறங்கினார். அதன்படி, அந்த உதவியாளர், ஃப்ரென்ச்சு மொழியின் எழுத்துக்களை ஒரு பெரிய அட்டையில் எழுதி வைத்திருக்க, ஒவ்வொரு எழுத்தாய் தன் விரல்களால் சுட்டி வருவார். அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் பாபி, தான் நினைக்கும் எழுத்து வந்ததும், அவரது கண்ணைச் சிமிட்டுவார். அந்த எழுத்தை உதவியாளர் எழுதிக் கொள்வார். இப்படி எழுத்தின் பின் எழுத்தாய், ஒவ்வொரு சொல்லாய், ஒவ்வொரு வாக்கியமாய், ஒரு முழு நீளப் புத்தகம் உருவானது. மொத்தமாக 2 லட்சம் கண் சிமிட்டல்கள் !! ஒரு வார்த்தைக்கு 2 நிமிடங்கள் என்ற அளவில் ஒரு நாளைக்கு 4 மணிநேரங்கள் மட்டுமே இந்த முயற்சி. சற்றே உணர்ந்து பாருங்கள், எந்த

அளவுக்கு நம்பிக்கை இருந்திருந்தால், உந்துதல் இருந்திருந்தால், வாழும் காலத்தின் அருமை புரிந்திருந்தால், ஒரு மனிதன் தன் கண்ணிமைகளாலேயே ஒரு புத்தகத்தை எழுதியிருக்க முடியும்?



1997, பிரெஞ்சு மொழியில், மொத்தம் நூற்றைம்பது பக்கங்கள் கொண்ட புத்தகமாக வெளிவந்தது. வெளிவந்த முதல் நாளே, 25000 பிரதிகள் விற்றுத் தீர்ந்தது. ஒரு வாரத்திற்குள் 1, 50,000 பிரதிகளைத் தாண்டி சாதனை படைத்தது. இந்தப் புத்தகம் ஆங்கிலம் உட்பட பல மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது,ஐரோப்பாவில் இன்றும் அதிக அளவில் விற்றுக் கொண்டிருக்கும் புத்தகமாக இருக்கிறது. ஃப்ரென்ச்சு மற்றும் ஆங்கில மொழி மாற்றில் திரைப்படமாகவும் வெளியாகி மிகப் பெரிய வெற்றி அடைந்தது.. ஆனால், புத்தகம் வெளியான மூன்றாவது நாளே , நிமொனியாவினால் இறந்துபோனார் பாபி. தன் புத்தகத்திற்கு கிடைத்த வெற்றி எதையும் அவர் பார்க்கவில்லை.

புத்தகம் எதை பற்றி பேசுகிறது?

இழந்த வாழ்க்கையின் சோகம், செயலற்று கிடப்பதைப் பற்றிய சுய இரக்கம், வேதனை, அதை தவிர்த்துக் கொஞ்சம் விருப்பங்கள், தான் செய்ய விரும்பும் செயல்கள் பற்றிய வர்ணனை, அதையெல்லாம் செய்துக் கொண்டிருப்பதுபோல் சிறு கற்பனைகள் என நீங்கள் எதிர்ப்பார்ப்பது மட்டும் தான் அந்த புத்தகம் முழுவதும்.

நோய் தாக்குவதற்கு முன், தன்னுடைய பரப்பான வேலை காரணமாக தன்னுடைய மகனுடன் நேரம் செலவிட முடியாமல் போனதை நினைத்து வருந்தும் இடமும், அதை கற்பனையிலேயே ஈடுகட்ட நினைக்கும் ஆதங்கமுமான அந்த இடங்கள் படிப்பவரின் மனதை வெகுவாக உலுக்கி விடுபவை.. ஆனால் முன்பே சொன்ன மாதிரி, இந்த உரைநடை புத்தகத்தைப் பற்றியோ அல்லது திரைப்படத்தைப் பற்றியோ நிச்சயமாகக் கிடையாது. ஒரேயொரு உண்மையைப் பற்றித்தான். ஒரு தனி மனிதனின் தன்னம்பிக்கைக்கும், அவன் செயல்திறமைக்கும் அவனுடையக் கற்பனை மாத்திரமே எல்லையாக இருக்க முடியும். இந்த உண்மையை இன்னுமொரு முறை ஆணித்தரமாய் நிருபித்த ஜேன் டாமினிக் பாபி எனும் சாதாரண மனிதனைப் பற்றியது.

புத்தகத்தின் பெயர் the Diving Bell and the Butterfly (ஃப்ரென்ச்சு பெயர்: Le Scaphandre et le Papillon). பெயரில் கூட எவ்வளவு அர்த்தம் பாருங்கள். Diving Bell என்பது ஆழ்கடல் ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்தும் ஒருவகை பாதுகாப்புக் கூண்டு. அந்தக் கூண்டை விட்டு அவர்களால் வெளியில் வர முடியாது. பாபியின் உடலும் அப்படி ஒரு கூண்டாக இருந்தது. ஆனால் அவர் மனம் மட்டும் பட்டாம்பூச்சியாய் (the Butterfly) அவர் தொட நினைத்த தூரமெல்லாம் சிறகடித்து திரிகிறது. இன்னமும்....

சரி மீண்டும் கேள்விக்கு வருவோம். ... எது சாத்தியம்?.

'எல்லாமே சாத்தியம் ' என்கிற விடை இப்போது புரியும்.

எழுதியவர் – இளங்கோ.

## அப்துல் கலாமின் அனுபவங்கள் - ஆசிரியப்பணி ஒரு உன்னதப் பணி

பள்ளிப் பருவத்தில் குழந்தைகளுக்கு அவர்களின் ஆசிரியர்களே உளிகளாக இருந்து செதுக்குகிறார்கள். அக்குழந்தைகள், பின்னாளில் பெரிய சாதனையாளர்களாக வருவதற்கும், வாழக்கையை நல்ல முறையில் வாழ்வதற்கும், அடிப்படையில் தூண்டு கோலாகவும், உதாரண புருஷர்களாகவும் இருப்பவர்கள் பள்ளி ஆசிரியர்களே. இது குறித்து டாக்டர். கலாம் கூறிய அவருடைய சொந்த அனுபவத்தை அவருடைய வார்த்தைகளிலேயே பார்க்கலாம்.

எனக்கு அப்போது 10வயது. 5ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் வகுப்பில் அனைவருக்கும் பிடித்த ஆசிரியராக சிவசுப்ரமணிய ஐயர் என்பவர் இருந்தார்.



ஒரு நாள் வகுப்பில் பறவைகள் பறப்பதை பற்றி சொல்லும்போது, கரும் பலகையில், பறவையை அதன் இறக்கை, வால் பகுதி, உடல் மற்றும் தலை பாகம் என்று மிக தெளிவாக படம் வரைந்து , பறவைகள் எப்படி பறக்கின்றன , 20,30 பறவைகள் எப்படி சேர்ந்தாற்போல் பறக்கின்றன என்பதை சுமார் 25 நிமிடங்களுக்கு மேலாக விரிவாக சொல்லிக் கொடுத்தார்.

வகுப்பு முடியும் நிலையில் எங்களுக்கு புரிந்ததா என்று கேட்டார். நாங்கள் அனைவரும் புரியவில்லை என்றோம். அப்போதும் அவர் கோபப் படவில்லை. மாறாக, அதை எங்களுக்கு புரிய வைப்பதற்கான முயற்சியில் இறங்கினார். அன்று மாலையில் எங்கள் அனைவரையும் ராமேஸ்வரம் கடற்கரைக்கு கூட்டிச் சென்றார். அங்கு பறவைகள் பலவாறாக பறந்துகொண்டிருந்தன.

முதலில் கடற்பறவைகள் 20,30 என்று கூட்டாக பறப்பதை கூர்ந்து கவனிக்கச் சொன்னார். அவை ஒரு தெளிவான ஒழுங்குடன் பறப்பதை பார்த்து ஆச்சரியமடைந்தோம். பின்னர், பறவைகள் பறக்கும் போது என்ன செய்கின்றன என்று கவனிக்கச் சொன்னார். அவை , இறக்கைகளைப் படபடவென அடித்துக் கொண்டு பறந்துகொண்டிருப்பதை கவனித்தோம். இப்போது, பறவைகள் இறக்கையை அடித்துக் கொண்டு பறக்கும் அதே நேரத்தில் அவற்றின் வால் பகுதியின் அசைவையும் கவனிக்க சொன்னார். கூர்ந்து கவனித்த போது, பறவைகள் தான் பறக்க விரும்பும் திசையினை நோக்கி தங்கள் வால் பகுதியை திருப்பியும், அசைத்தும் பறக்கின்றன என்பதை கண்டு பெரும் வியப்பாக இருந்தது.

இப்போது பறவைகளுக்கு என்ஜின் எனபது எது ...அதற்கான சக்தி எது என்று கேட்டார் ஆசிரியர்.

பறவைகளுக்கு சக்தி அவற்றின் உயிர் மற்றும் எதற்காக எந்த திசை நோக்கி பறக்க வேண்டும் என்ற தெளிவும் தான் எனபது இப்போது எங்களுக்கு தெளிவாகப் புரிந்தது. அரை மணி நேர தியரி வகுப்புடன் 15 நிமிட பிராக்டிகல் வகுப்பும் எங்களுக்கு மிகத் தெளிவாக சிக்கலான பாடத்தை மிக எளிதாக புரிய வைத்தது. எங்கள் ஆசிரியரின் பொறுமையும், பாடம் சொல்லிக் கொடுப்பதில் இருந்த ஈடுபாடும் தான் இதற்கு காரணம்.

என்னை பொறுத்த வரையில் அன்று பறவைகள் குறித்த தெளிவான பாடம் விமானங்களை குறித்து படிக்க வேண்டும் என்ற தீவிரமான எண்ணத்தை மனதில் விதைத்தது. 5 ஆம் வகுப்பு முடிக்கும் போதே , நான் என்ன படிக்க விரும்புகிறேன், எப்படி அதை அடைய வேண்டும் என்பது குறித்த தெளிவான சிந்தனை எனக்கு வந்ததற்கு காரணம் எனக்கு அமைந்த ஆசிரியர்தான்.

ஆசிரியப் பணி என்பது பல தலைவர்களை உருவாக்கும் ஒரு உன்னதப் பணி. அதை உணர்ந்து செயல்படும் ஆசிரியர்கள், பள்ளியிலேயே கிடைக்கப் பெற்ற மாணவர்கள் ஒவ்வொருவரும் பின்னாள் தலைவர்களே.

## சமூகப் பணி – Power of Social Work

ஆப்ரஹாம் லிங்கன் "நாம் ஒரு டாலர் பணத்தை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்ளும்போது, இருவரிடமும் ஒரு டாலர் இருக்கும்.

அதுவே, நல்ல எண்ணங்களை பரிமாறிக் கொள்ளும்போது ,இருவரிடமும் இரண்டு நல்ல எண்ணங்கள் இருக்கும்" என்று கூறினார்.




அந்த வகையில், சமூகத்திற்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற எண்ணம் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இருக்கிறது. ஆனால் இதை எப்படி செய்வது என்பது தான் அவர்களுக்கான பெரிய குழப்பம்.

நாம், தெருவில் நடந்து செல்லும் போதோ, வாகனத்தில் செல்லும் போதோ, அலுவலகத்திலோ அல்லது வீட்டிலோ பல சூழ்நிலைகளை (Situations) சந்தித்து இருப்பீர்கள். பின் வரும் சூழ்நிலைகளில் என்ன செய்திருப்பிர்கள் என்று நினைத்துப் பாருங்கள்.

1) நீங்கள் பேருந்தில் ஜன்னல் ஓரம் உட்கார்ந்து காதில் ஹெட்ஃபோன்களோடு பயணம் செய்கிறீர்கள். அப்போது, ஒரு வயசான அல்லது உடல் ஊனமுற்ற நபர் ஒருவர் பேருந்தில் ஏறுகிறார்.

உடனடியாக நீங்கள் எழுந்து உங்கள் இருக்கையை அவருக்கு விட்டுக் கொடுக்கலாமே ? நிச்சயமாக அவர்கள் உங்கள் செயலுக்கு நன்றி சொல்வார்கள். கொஞ்சம் தூரம், நின்று பயணிப்பதில் தப்பொன்றும் இல்லை.

2) நீங்கள் காலையில் தெருவில் நடந்து செல்லும் போது, எதிரே வரும் இரு சக்கர வாகனத்தின் தலைமைவிளக்கு (Headlamps) ON செய்யப்பட்டிருக்கிறது அல்லது சைடு ஸ்டான்ட் போடப்பட்டிருக்கிறது.

உடனடியாக அதைப் பற்றி ஓட்டுபவரிடம் சொல்லி தலைமை விளக்கை அணைக்கச் சொல்லலாமே? சைடு ஸ்டான்டை எடுக்கச் சொல்லலாமே ?

3) நீங்கள் சாலையில் வாகனம் ஒட்டிக்கொண்டு வரும் போது, ஒருவர் தெருவை கடக்க முயற்சிக்கிறார். நீங்கள் சாலையில் நடந்து செல்லும் போது, வயதான முதியவர் ஒருவர் சாலையைக் கடக்க கஷ்டப்படுகிறார்.

நீங்கள் உங்கள் வாகனத்தை நிறுத்தி, சாலையைக் கடப்பவர்க்கு வழி விடலாமே ? அந்த முதியவர் சாலையைக் கடக்க உதவி செய்யலாமே ?

4) நீங்கள் ஒரு தள்ளு வண்டி காய்கறி விற்பனையாளரிடம் இருந்து பழங்கள் வாங்குகிறீர்கள். அவர் வாழைப்பழம் 1 டஜன் விலை ரூ 12 என்கிறார். நீங்கள் பேரம் பேசி 10 ரூபாய்க்கு அதைக்கேட்கிறீர்கள் அதுவும் 12 ருபாய் நியாமான விலை என்று தெரிந்து கொண்டே !!!

அந்த 2 ரூபாய் தான் அவருடைய லாபமாக இருக்கும். ஏன் அவர்கள் கேட்கும் விலையை கொடுக்கக் கூடாது? (ரொம்ப அதிகமாக (exorbitantly high) கேட்டால் தவிற)

5) நீங்கள் சாலையில் நடந்து செல்லும் போது, சாலை ஓரத்தில் பார்வையற்றோர் பாட்டு பாடும் நிகழ்ச்சி ஒன்று நடந்து கொண்டு இருக்கிறது. அதைப் பார்த்து கை தட்டி ரசிக்கிரீர்கள்.

பார்த்து ரசித்து கை தட்டுவதோடு இல்லாமல், அவர்களிடம் சென்று பாராட்டி, ஏன் உங்களால் முடிந்த உதவியை செய்யலாமே? 150 ரூபாய் கொடுத்து திரை அரங்குகளில் படம் பார்க்கும் நாம், ஏன் இந்த தெரு ஓரக் கலைஞர்களை ஊக்குவித்து ஆதரிக்ககூடாது?

6) நீங்கள் பிச்சை எடுக்கும் ஒரு சிறுவனை பார்க்கிறீர்கள். அவனுடைய நிலையை நினைத்து வருத்தப்பட்டு, காசு ஏதேனும் நீங்கள் கொடுப்பீர்கள். சில சமயம் கொடுக்காமலும் போவீர்கள்.

ஏன் பணம் கொடுப்பதற்கு பதிலாக பக்கத்துக் கடைகளில் சாப்பாடு வாங்கி கொடுத்து, அவரிடம் கொஞ்சம் நேரம் பேசிவிட்டு செல்லக்கூடாது?

7) நீங்கள் வண்டியில் செல்லும் போது, விபத்து ஒன்றைப் பார்க்கிறீர்கள். அப்போது மற்றவர்களை போல், நின்று வேடிக்கைப் பார்கிறீர்கள். பின்னர், உங்கள் வழியில் செல்கிறீர்கள்.

ஏன், 108 க்கு அழைத்து அம்புலன்சை வரவழைக்கலாமே? உங்களுக்குத் தெரிந்த முதல் உதவியை செய்யலாமே? காயமடைந்தவர்களை மருத்துவமணையில் சேர்க்கலாமே?

8) உங்களிடம் , அதிகமாக அணியப் படாமலும் , சிறிதாகப் போய் விட்டதுமான உடைகள் நிறைய இருக்கும். அவற்றை, உங்கள் இருப்பிடத்திற்கு அருகில் உள்ள ஏழை மக்களுக்குக் கொடுத்து உதவலாமே ?

இதைப் போன்று பல சிறு சிறு விஷயங்களை நாம் செய்யலாம். இதற்கு சிறிதளவே பணம் மற்றும் நேரம் தேவைப் படுகிறது.

இது போன்ற சிறு சிறு விஷயங்களை செய்து பழகியவர்கள், இதை விட அதிக நேரமும், சக்தியும் தேவைப்படும் அடுத்த நிலைக்கு எளிதாகப் போக முடியும்.

பள்ளிக் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுத்தல்

பொதுத் தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகளில் ஈடுபடுத்திக் கொள்ளுதல்

ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு ரெகுலராக சென்று அவர்களுடன் அளவளாவுதல்

இதையெல்லாம் தொடர்ந்து செய்யும்போது நீங்கள் BOSS [Bachelor of Social Service ] ஆகி விடுவீர்கள் .

வாழ்க்கை என்பது நாம் வாழும் நாட்களை எப்படி மகிழ்ச்சியாகக் கழிக்கிறோம் என்பதை பொறுத்ததுதான். இதில் அடுத்தவர் வாழ்க்கையிலும் சிறிதளவு மகிழ்ச்சியை ஏற்படுத்த முடிந்தால் நம் வாழ்க்கை இன்னும் சிறப்பானதாக அமையும்.

எழுதியவர் திவாகரன்

## ஆசிரியர் குழு









பிரைம் பாயிண்ட் சீனிவாசன், தலைமை ஆசிரியர்

பானு கோம்ஸ், ஆசிரியர்

ஜி. பிரதீப்

இளங்கோ

## ஆசிரியர் குழு – வழிகாட்டுபவர்கள் (Editorial Mentors)







வி. பொன்ராஜ்

ஓம் முருகன்

ஜே. பிரபாகர்

**Published by**

**Prime Point Foundation, Chennai**

**Please send your feedback to**

**newgenthamizhan@gmail.com**

**Please also read our English Ezine at**

**www.corpezine.com**

Disclaimer: The views and opinions expressed in this ezine are those of the authors / contributors and do not necessarily reflect the views and opinions of the Publishers and Editorial Team members.